செ.வெ.எண்: 36 நாள்:23.11.2018

# அரியலூர் மாவட்டத்தில்
# எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம் 28.11.2018 அன்று நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்ட உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பாக **எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டம்**, **ஆண்டிமடம் வட்டாட்சியர் அலுவலகத்தில்,** மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தலைமையில் **28.11.2018 அன்று பிற்பகல் 03.00** மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து எண்ணெய் நிறுவனங்களின் பிரதிநிதிகள், எரிவாயு முகவர்கள் கலந்துகொள்ள உள்ளனர். எரிவாயு நுகர்வோர்கள், சமையல் எரிவாயு தொடர்பான குறைகள் இருப்பின் இந்த குறைதீர் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களது புகார்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**